ஓம்

நற் சிந்தனை 016 - திரு

இன்று நிர்வாகத்தின் அறிவித்தல்களில் நம்மிடையே யுள்ள அடியவர்; ஆலயத் தொண்டர்; முதியவர்; பெரியவர்; நல்லவர் ஒருவரின் பிறந்த நாள் வாழ்த்துக்களைக் கேட்டோம். அவரை நாம் அளைக்கும் பொழுது "அங்கிழ்" என்போம். ஆயின் அவர் பெயரைக் குறிப்பிடுவதாக இருந்தால் பெயர் முன்னாற் "திரு" அல்லது "திருவாளர்" எனத் தொடங்குகின்றோம். அவரது பிறந்த நாளையொட்டித் தமிழிற் திரு என்பதன் தத்துவப் பொருளை இன்றைய நற்சிந்தனையிற் சிறிது பார்ப்போம்.

திரு என்பது சாதாரணமாக பொன் பொருள் பணம் போன்ற பூலோகச் சடப் பொருட்கள். ஆயின் இந்தத் திரு தமிட் சொற்களிற்கு அடைமொழியாக வரும் பொழுது மேலோங்கிச் சிறப்புறுகிறது. ஒருவர் பெயர் முன் திரு - திருமதி - திருவாளர் என்றால்; அவர் பண்பும் குணமும் பல நலமும் நிறைந்துள்ள சான்றோர் என்றே அர்த்தம். அதைவிட்டு ஒரு கள்ளியை காவாலியை பொய் புரட்டனைத் திருவாளர் என்பதில்லை. அப்படிச் சொல்லப்போக வாய் கூசும்; சொல்லிவிட்டாற் கேட்போர் காதுங் கசக்கும்.
இங்கு ஆலயத்திற் கதவுக்குப் பதிலாகத் திருக்காப்பு என்போம்; மூர்த்திகளைச் சிலையெனாது திருவுருவம் திருமேனி என்போம்; மூர்த்தியைச் சுற்றியுள்ள அரைவட்ட அலங்காரம் திருவாசி (திருவாட்சி); நம் துர்க்காதேவி நமக்குச் செல்வங்களை வழங்கும் பொழுது திருமகள் ஆகிறாள்; காக்கும் போது திருமால் ஆகிறாள்; நம்மை ஆட்கொள்ளும் போது திருநீலகண்டனுடன் காட்சி தருவாள். நாம் இங்கு பாடுவது திருத்தொண்டர்கள் திருவாய்மலர்ந்தருளிய திருமுறைகள் திருவெம்பாவை திருப்பள்ளி எழுச்சி. இங்கு நடப்பன திருநாள் திருவிழா திருவிளையாடல் திருக்கல்யாணம். அடியார்கள் இங்கு புரியும் செயல் எல்லாம் திருத்தொண்டு. ஆகையால் ஆலயத்திற் திரு என்பது தெய்வீகம்; மங்கலம்.
சிந்தையிற் திரு திரு திரு! தெய்வீகம் மங்கலம்! தெய்வீகம் மங்கலம்!

இளம் பிராயத்தில் நம்மிற் சிலர் திருகுதாளம் போட்டாலும் (சிலர் பகிடியாக திருக்கூத்தென்பர்) அவற்றைத் திரும்பிப் பார்த்து; அப்பிழைகளைத் திரும்பத் திரும்பச் செய்வதில்லை என்ற மனதிடமான தீர்மானத்தோடு நம்மை நாமே திருத்திக்கொண்டால் நாமும் திருவாளர் திருமதி ஆகலாம் என்பது திடம். திரும்பவும் பகரின் திருகுதாளம் ஏதுஞ் செய்யாது செய்த பிழைகளைத் திருத்தி நாம் திருந்தினதும் நாம் திருவாளர் திருமதி ஆகிறோம். அப்படி ஆகிவிட்டால் நாம் யார்

முன்னிலையிலும் திருதிருவென்று விழிக்கத் தேவையில்லை;
மற்றவர்களும் நம்மைப் பார்த்துத் திரு திரு வென்று முழிக்கவும் வேண்டியதில்லை.
இவ்வாலய அடியார்களாகிய நாம் திருப்பணியையும் செய்து வருவோமானால் திருத் தொண்டர் ஆகலாம். அதற்கும் மேலாக முழு மனதோடு திருத் தொண்டு செய்யத் திருத்தொண்ட நாயனார் போன்று திருநீலகண்டன் திருப்பாதம் சேர்வோம் என்கிறது பெரிய புராணம்.

சுருங்கச் சொன்னால் திரு எனும் சொல் பெருஞ் செல்வத்தைச் சிறப்பித்து; நற்குணத்தில் உயர்ந்து; புனித ஒளி பெறுகிறது. அதேபோல் நாமும் உள்ளத்துள் உறைந்திருக்கும் உண்மை ஒளியை நோக்கிப் படிப்படியாக உயர்ந்து தெய்வீகத் தன்மை பெறத் தேவியின் அருளை வேண்டி ஒரு கணம் தியானத்தை முயற்சித்து நம் இறை வணக்கத்தை முடிப்போம்.

ஓம்